**இஸ்லாமிய சமய மன்றம் (சிங்கப்பூர்)**
**வெள்ளிக்கிழமைப் பிரசங்கம்**
**11 டிசம்பர் 2015 / 28 ஸஃபர் 1437**

# <u>சக முஸ்லிம்களின் உரிமைகள் விஷயத்தில் இறைத்தூதர் முஹம்மது (ஸல்) அவர்களின் நன்னடத்தையைப் பின்பற்றுதல்</u>

اَلْحَمْدُ لِلَّهِ الَّذِي أَرْسَلَ رَسُوْلَهُ بِالْهُدَى وَدِيْنِ الْحَقِّ بَشِيْرًا وَنَذِيْرًا
وَدَاعِيًا إِلَى اللَّهِ بِإِذْنِهِ وَسِرَاجًا مُنِيْرًا وَأَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلاَّ اللَّهُ
وَحْدَهُ لاَ شَرِيْكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ
وَصَفِيُّ اللَّهِ مِنْ خَلْقِهِ وَحَبِيْبُهُ إِمَامُ الأَنْبِيَاءِ وَسَيِّدُ الْمُرْسَلِيْنَ اَللَّهُمَّ
صَلِّ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِهِ وَصَحْبِهِ وَسَلِّمْ تَسْلِيْمًا كَثِيْرًا.
أَمَّا بَعْدُ فَيَا عِبَادَ اللَّهِ اتَّقُوْا اللَّهَ حَقَّ تُقَاتِهِ وَلاَ تَمُوْتُنَّ إِلاَّ وَأَنْتُمْ
مُسْلِمُوْنَ

வெள்ளிக்கிழமையில் ஒன்று கூடியுள்ள அருள்மிக்க ஜமாஅத்தார்களே!

அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் அனைத்து கட்டளைகளுக்கும் கட்டுப்பட்டு நடப்பதன் மூலமாகவும், அவன் தடை செய்துள்ள அனைத்து விஷயங்களிலிருந்து தவிர்ந்து கொள்வதன் மூலமாகவும் அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் மீதான நமது "தக்வா" எனும் பக்தியை

அதிகரித்து, அதனை உச்சகட்டமாக ஏற்படுத்திக் கொள்வோமாக! அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா, நமக்கு மத்தியிலான உறவு முறைகளை நாம் பலப்படுத்திக் கொள்ள அருள் புரிவானாக! இன்ஷாஅல்லாஹ். ஆமீன்.

ஜமாஅத்தார்களே!

கடந்த வார வெள்ளிக்கிழமைப் பிரசங்கத்தில் இறைத்தூதர்(ஸல்) அவர்களை நமது முன்மாதிரியாக அமைத்துக் கொள்வதன் அவசியத்தைப் பற்றி விவாதிக்கப்பட்டது. இறைத்தூதர் முஹம்மது(ஸல்) அவர்கள் அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா விஷயத்தில் பின்பற்றிய ஒழுங்கு முறைகள் (அதப்), நன்னடத்தைகள் பற்றியும் எடுத்துரைக்கப்பட்டது. இன்ஷாஅல்லாஹ், இன்றைய பிரசங்கத்தில் மனிதர்களுக்கு மத்தியிலான உறவுகளைப் பாதுகாப்பதன் அவசியத்தைப் பற்றி விவாதிக்கப்பட உள்ளது. காரணம், அல்லாஹ்வின் உரிமைகளையும், சக மனிதர்களின் உரிமைகளையும் நாம் மதித்து, அவற்றை நிறைவேற்றும் போது தான் நமது ”ஈமான்” எனும் ஓரிறை நம்பிக்கை பரிபூரணமாக அமையும்.

அன்பிற்கினிய ஜமாஅத்தார்களே!

நாம் மற்றவர்களுடன் பழகும் போது, கொடுக்கல், வாங்கல் செய்து கொள்ளும் போது பின்பற்ற வேண்டிய ஒழுங்கு முறைகளைக் குறைத்து மதிப்பிட முடியாது. மறுமையில் மனிதர்களுக்கு ஏற்பட இருக்கும் பல நிலைமைகளைப் பற்றி இறைத்தூதர் முஹம்மது(ஸல்) அவர்கள் கூறிய ஹதீதில் சிந்தனை செய்து, அதில் நாம் பாடம் பெற வேண்டும். சிலர், இம்மையில் அதிக வணக்க வழிபாடுகளில் ஈடுபட்டதன் காரணமாக,

மறுமையில் அதிகமான நன்மைகள் மற்றும் வெகுமதிகளுடன் அல்லாஹ்வைச் சந்திப்பார்கள். ஆனால், அவர்கள் உலகில் இருக்கும் போது யாருக்கெல்லாம் அநீதமிழைத்தார்களோ, எவர்கள் விஷயத்தில் தவறிழைத்தார்களோ அவர்களால் அவ்வெகுமதிகள் பறித்துச் செல்லப்படும். அப்போது வெகுமதிகள் எதுவுமின்றி வெறும் கையுடன் நிற்பார்கள். ரசூலுல்லாஹி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: இவ்வாறு, அவர்களால் அநீதமிழைக்கப்பட்டவர்களுக்கு அவர்களது நன்மைகளை யெல்லாம் கொடுக்கப்பட்டு, மேற்கொண்டு அநீதமிழைக்கப்பட்வர்கள் இருந்தால், அவர்களுக்கு நன்மைகளைக் கொடுக்க அவர்களிடம் நன்மை இல்லையெனில், அநீதமிழைக்கப்பட்டவர்களின் தீமைகளை, பாவங்களை அவர்கள் மீது சுமத்தப்படும்; அந்நிலையில் அவர்கள் நரகத்தில் வீசப்படுவார்கள். (ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்: இமாம் முஸ்லிம் ரஹ்)

மேற்கண்ட ஹதீது, மற்றவர்களின் உரிமைகளை நிறைவேற்றுவதின் அவசியத்தையும், அவர்களுடன் நல்ல உறவை ஏற்படுத்திக் கொள்வதையும், ஒருவரது "ஈமான்" (இறை நம்பிக்கையுடன்) இவ்விஷயம் எவ்வாறு தொடர்புடையதாக உள்ளது என்பதையும் சுட்டிக் காட்டுகிறது. அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா திருக்குர்ஆனின் "அத்-தஹ்ரீம்" எனும் அத்தியாயத்தின் 6-வது வசனத்தில் கூறும் பின்வரும் கருத்துக்களில் நாம் சிந்தனை செய்ய வேண்டும்:

يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُوا۟ قُوٓا۟ أَنفُسَكُمْ وَأَهْلِيكُمْ نَارًا وَقُودُهَا ٱلنَّاسُ
وَٱلْحِجَارَةُ عَلَيْهَا مَلَٰٓئِكَةٌ غِلَاظٌ شِدَادٌ لَّا يَعْصُونَ ٱللَّهَ مَآ أَمَرَهُمْ
وَيَفْعَلُونَ مَا يُؤْمَرُونَ ﴿٦﴾

பொருள்: இறைநம்பிக்கை கொண்டவர்களே! மனிதர்களும் கற்களும் எரிபொருள்களாகக்கூடிய அந்த நரக நெருப்பிலிருந்து உங்களையும் உங்கள் மனைவி மக்களையும் காப்பாற்றிக் கொள்ளுங்கள். அதன் மீது, கடும் சீற்றமுடைய வானவர்கள் நியமிக்கப்பட்டிருப்பார்கள். அவர்கள் அல்லாஹ்வின் கட்டளைக்கு ஒருபோதும் மாறு செய்வதில்லை. அவர்களுக்கு எந்தக் கட்டளை இடப்பட்டாலும் அதனை அவர்கள் நிறைவேற்றுகிறார்கள்.

மேற்கண்ட வசனத்துக்கு செய்யிதினா அலீ பின் அபூதாலிப் (ரலி) அவர்கள் விளக்கமளிக்கையில்: "அவர்களுக்கு (அதாவது உங்கள் குடும்பத்தார்களுக்கு) நன்னடத்தைகளைப் பற்றி போதனை செய்யுங்கள்; கல்வியறிவால் அவர்களை ஆயத்தப்படுத்துங்கள்" என்று கூறினார்கள். எனவே தான், நமது குடும்பத்தார்களிடம், குறிப்பாக, பிள்ளைகளிடம் நன்னடத்தைகளை ஏற்படுத்த வேண்டும். அவர்களை ரப்பானி தலைமுறைகளாக ஆக்க வேண்டும். அல்லாஹ்வின் கட்டளைகளை கவனத்தில் கொள்பவர்களும் தமக்குள் நல்ல உறவுகளை ஏற்படுத்திக் கொள்பவர்களும் தான் ரப்பானி தலைமுறையினர் ஆவர்.

எனவே, முஸ்லிமான நமது சகோதர, சகோதரிகளுடன் பழகும் போதும், கொடுக்கல், வாங்கல் செய்து கொள்ளும் போதும் நமது நடத்தைகளில் நாம் கவனம் செலுத்த வேண்டும்; நன்னடத்தைகள் பின்பற்றப்படுவதை உறுதி செய்ய வேண்டும். இது நமது கடமையாகும்.

குறிப்பாக, தொழில் துறை முன்னேற்றங்களும், அபரிவிதமான தகவல் தொடர்புகளும் ஏற்பட்டுள்ள இக்காலத்தில் நன்னடத்தைகள் பின்பற்றப்படுவது மிகவும் அவசியமாகி விட்டது. தற்காலத்தில் ஒருவர் மற்றவருடன் தொடர்பு கொள்வது மிகவும் எளிதாகி விட்டது. எனினும், நாம் முஸ்லிம்கள் எனும் ரீதியில், நாம் தொடர்பு கொள்ளும் துறைகள் எதுவாக இருப்பினும் நம்மால் முடிந்த வரை மற்றவர்களின் உரிமைகளை மதித்து, அவற்றை நிறைவேற்றுவதை உறுதி செய்ய வேண்டும்.

ஜமாஅத்தார்களே!

இங்கு, நமது சகோதர முஸ்லிம்களின் எந்த உரிமைகளை மிகவும் மதித்து நடந்து கொள்வது அவசியம் எனச் சிந்திக்க வேண்டும். இறைத்தூதர் முஹம்மது(ஸல்) அவர்களின் ஹதீதில் பல பாடங்கள் காணப்படுகின்றன. அவற்றை நாம் முன்மாதிரியாக அமைத்துப் பின்பற்றலாம். அவற்றில் சில பின்வருமாறு:

**முதன்முதலாக,** நமது சகோதர, சகோதரிகளுக்கு எப்போதும் நாம் நன்மையை நாடுபவர்களாக இருக்க வேண்டும். இது ஒரு உண்மையான இறை நம்பிக்கையாளரின் (முஃமின்) சிறப்பான தன்மையாகும். நமது பாசத்திற்குரிய இறைத்தூதர் முஹம்மது(ஸல்) அவர்கள் தனது தோழர்களுடன் பழகிய போது கடைப்பிடித்த நன்னடத்தைகளில் கவனம் செலுத்துங்கள். நபி முஹம்மது(ஸல்) அவர்கள் தமது தோழர்களுக்கு

எப்போதும் ஆர்வமூட்டுபவர்களாகவும் அவர்களுக்கு உதவி செய்பவர்களாகவும், அவர்களுக்கு எப்போதும் நன்மையை நாடுபவர்களாகவும் இருந்தார்கள். ரசூலுல்லாஹி(ஸல்) அவர்கள் ஒரு ஹதீதில் நவின்றார்கள்:

الْمُؤْمِنُ مِرْآةُ الْمُؤْمِنِ وَالْمُؤْمِنُ أَخُو الْمُؤْمِنِ يَكُفُّ عَلَيْهِ ضَيْعَتَهُ وَيَحُوطُهُ مِنْ وَرَائِهِ

பொருள்: ஒரு முஃமின் மற்றொரு முஃமினுக்கு முகம் பார்க்கும் கண்ணாடியைப் போன்று உள்ளார். ஒரு முஃமின் மற்றொரு முஃமினுக்கு சகோதரராகவும் உள்ளார். எனவே, ஒரு முஃமின் தனது சக முஃமினிடம் குறைகள், தவறுகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்வார். அவரைக் கண்காணிப்பவராகவும் இருப்பார். (ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்: இமாம் அபூதாவுத் ரஹ்)

இவ்வாறு தான், இறைத்தூதர்(ஸல்) அவர்கள் முஸ்லிம்களுக்கு மத்தியில் நல்ல உறவை ஏற்படுத்திக் கொள்வதன் அவசியத்தை வலியுறுத்திக் கூறியுள்ளார்கள். நமது சகோதர முஸ்லிம் நல்ல தனிநபராக ஆகுவதற்கு நாம் அவருக்கு உதவ வேண்டும். அவ்வுதவியை அவருக்குத் தெரிந்தோ அல்லது தெரியாமலோ செய்யலாம்.

மற்றவர் மீது பொறாமை கொள்ளக் கூடிய, பகைமை மற்றும் தவறான எண்ணம் கொள்ளக்கூடிய நபர்களாக நாம் ஆகக் கூடாது. தவறான எண்ணங்களும் உணர்வுகளும் மகிழ்ச்சியின்மையை ஏற்படுத்தும். தனது சகோதரருக்கு தீய விளைவுகள் ஏற்பட வேண்டும் என்ற எண்ணத்தை

ஏற்படுத்தும். நவூதுபில்லாஹ்! (அல்லாஹ் அவ்விதமான உணர்வுகளை விட்டும் நம்மைப் பாதுகாப்பானாக!)

ரசூலுல்லாஹி(ஸல்) அவர்கள் கூறிய பின்வரும் ஹதீதில் நாம் கவனம் செலுத்த வேண்டும்:

மற்ற முஸ்லிமுக்கு பாதிப்பை ஏற்படுத்தி, எவர் ஒருவர் உணவைத் தேடிக் கொள்கிறாரோ அல்லாஹ் அவருக்கு மறுமையில் நரகத்திலிருந்து உணவைப் புகட்டுவான். எவரொருவர், மற்ற முஸ்லிமுக்கு பாதிப்பை ஏற்படுத்தி, உடைகளைத் தேடிக் கொள்கிறாரோ அவருக்கு மறுமை நாளில் நரகத்தின் உடைகளை அல்லாஹ் உடுத்தச் செய்வான். எவரொருவர், மற்ற முஸ்லிமிடம் கர்வமாக நடந்து கொள்வாரோ அவரிடம் அல்லாஹ் மறுமைத் தீர்ப்பு நாளில் கர்வத்துடன் நடந்து கொள்வான். (ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்: இமாம் அபூதாவுத் ரஹ்)

அன்பிற்கினிய ஜமாஅத்தார்களே!

நாம் பின்பற்ற வேண்டிய மற்றொரு நன்னடத்தை, நம்மை நாம் விரும்புவது போல் நமது சகோதரர்களையும் நாம் விரும்புவதாகும். ஒருவர் மற்றவரை விரும்பும் போது தான் அவருக்கு நன்மையை நாடுவார். நமது குடும்பத்திலுள்ள ஒவ்வொரு தனிநபரையும் நாம் விரும்புவது போல் ஒவ்வொரு முஸ்லிமையும் நாம் விரும்ப வேண்டும்.

இறைத்தூதர்(ஸல்) நவின்றுள்ளார்கள்:

உங்களுக்கு எதை நீங்கள் விரும்புகிறீர்களோ அதனையே உங்கள் சகோதரருக்கும் நீங்கள் விரும்பாத வரை நீங்கள் பரிபூரணமான இறை

நம்பிக்கையாளராக ஆக முடியாது. (ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்கள்: இமாம் புகாரி ரஹ், இமாம் முஸ்லிம் ரஹ்)

எனவே, ஓரிறை நம்பிக்கையாளர் (முஃமின்) எப்போதும் தனது சகோதரரை விரும்புபவராக இருப்பார். தனது சகோதரர் என்ன செய்கிறார்? அவரது தேவைகள் பூர்த்தியாகி விட்டனவா? அவரிடம் இஸ்லாமிய சன்மார்க்கம் எந்த அளவு காணப்படுகிறது? அவரது சுமைகளையும் கஷ்டங்களையும் குறைப்பதற்கு தன்னால் எவ்வாறு உதவ முடியும்? என்று தன்னைத் தானே அடிக்கடி கேட்டுக் கொள்பவராக இருப்பார்.

இதனை அடிப்படையாகக் கொண்டு தான், நமது பாசத்திற்குரிய இறைத்தூதர்(ஸல்) அவர்கள் இஸ்லாமியத் தூதை உலக மக்களிடம் பரப்பினார்கள். இறைத்தூதர் (ஸல்) தனது உம்மத்துக்கு (சமுதாயத்துக்கு) எப்போதும் நன்மையை விரும்புபவர்களாக இருந்தார்கள். தனது சமுதாயத்தின் நன்மை, அபிவிருத்தி மற்றும் வளத்திற்காக எப்போதும் பிரார்த்தனை செய்து வந்தார்கள்.

இமாம் இப்னு ஹிப்பான் (ரஹ்) பின்வரும் ஹதீதை அறிவிக்கின்றார்கள்:

ஒருமுறை, இறைத்தூதர் முஹம்மது(ஸல்) அவர்கள் தனது மனைவி, செய்யிததினா ஆயிஷா (ரலி) அவர்களுக்காக பின்வருமாறு துஆச் செய்தார்கள்:

اَللّٰهُمَّ اغْفِرْ لِعَائِشَةَ مَا تَقَدَّمَ مِنْ ذَنْبِهَا وَمَا تَأَخَّرَ وَمَا أَسَرَّتْ وَمَا أَعْلَنَتْ

பொருள்: யா அல்லாஹ்! ஆயிஷாவின் முன் பின் பாவங்களையும், அவர்கள் மறைமுகமாகவும் பகிரங்கமாகவும் செய்த பாவங்களையும் மன்னிப்பாயாக!

பின்பு செய்யிததினா ஆயிஷா (ரலி) அவர்களை நோக்கி: ”நான் ஒவ்வொரு தொழுகைக்குப் பின்பும் இவ்வாறு தான் எனது சமுதாயத்துக்காக துஆச் செய்கிறேன்” என்று நபி(ஸல்) கூறினார்கள்.

எனவே, இறைத்தூதர் முஹம்மது(ஸல்) அவர்களின் உம்மத்தினர் எனும் ரீதியில், நாம் ஒருவர் மற்றவரை நேசித்து, மற்றவர் விஷயத்தில் அக்கறை செலுத்த வேண்டும். ஒருவர் மற்றவருக்கு எதிராக கடுமையான வார்த்தைகளைப் பயன்படுத்தக் கூடாது. குறிப்பாக, கருத்துவேறுபாடுகள் ஏற்படும் போது - அக்கருத்துவேறுபாடுகள் மார்க்கம் சம்பந்தப்பட்டதாகவோ அல்லது மற்ற எவ்விஷயம் சம்பந்தப்பட்டதாக இருப்பினும்- கடுமையான வார்த்தைகளைப் பயன்படுத்துவதைத் தவிர்க்க வேண்டும். காரணம், அவ்வாறு செய்வது இறைத்தூதர் முஹம்மது(ஸல்) அவர்களால் போதிக்கப்பட்ட நடத்தைகள் அல்ல.

இறைத்தூதர்(ஸல்) அவர்களின் அடிச்சுவட்டை ஆர்வத்துடன் பின்பற்றுவதற்கு அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா நமக்கு அருள் புரிவானாக! நம்மால் முடிந்த அளவு அல்லாஹ்வின் கடமைகளையும் அவனது அடியார்களின் கடமைகளையும் பரிபூரணமாக நிறைவேற்றும் ஆற்றலை அல்லாஹ் நமக்கு வழங்குவானாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

بَارَكَ اللهُ لِي وَلَكُمْ فِي الْقُرْآنِ الْعَظِيْمِ، وَنَفَعَنِي وَإِيَّاكُمْ بِمَا فِيْهِ مِنَ الآيَاتِ وَالذِّكْرِ الْحَكِيْمِ، وَتَقَبَّلَ مِنِّي وَمِنْكُمْ تِلَاوَتَهُ إِنَّهُ هُوَ السَّمِيْعُ الْعَلِيْمُ، أَقُوْلُ قَوْلِي هَذَا وَأَسْتَغْفِرُ اللهَ الْعَظِيْمَ لِي وَلَكُمْ، وَلِسَائِرِ الْمُسْلِمِيْنَ وَالْمُسْلِمَاتِ، وَالْمُؤْمِنِيْنَ وَالْمُؤْمِنَاتِ، فَاسْتَغْفِرُوهُ فَيَا فَوْزَ الْمُسْتَغْفِرِيْنَ وَيَا نَجَاةَ التَّائِبِيْنَ.